எப்படி குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படைக் கருவாக உள்ளது என்பதும், குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதிலும், கல்வி போதித்தலிலும், அறநெறிப்பயிற்சியிலும், தற்காப்பிலும் மனிதத்தின் அவசியத்தையும் அறிந்திருப்போம்.

5 பிப்ரவரி 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 5 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **ஒற்றுமை**

# உலக அமைதி மற்றும் ஒருங்கிணைந்த வாழ்வு வாழ அழைப்பு விடுக்கும் ஓர் ஆவணம்.

அபுதாபி, 4 பிப்ரவரி 2019 - திருத்தந்தை பிரான்சிஸ், அல்-அசார் தலைமை இமாம், அஹ்மாட் அல் தாயேப்.



சம உரிமைகள், கடமைகள் மற்றும் மானுட மாண்பு வழியாக ஒட்டுமொத்த மானுடத்தையும் படைத்த கடவுளின் பெயரால், அனைவரையும் சகோதர சகோதரிகளாகப் பாவித்து, நற்பண்புகள், அன்பு மற்றும் அமைதி என்னும் மதிப்பீடுகள் வழியாக இந்த உலகத்தை நிரப்பவும்,

மானுடத் தோழமை ஒட்டு மொத்த மானுடத்தையும் ஒரே குழுமமாக ஒன்றுகூட்டி, அனைவரையும் சமமாக ஐக்கியப்படுத்தி, வாழ வழிவகை செய்வதாகவும்,

அறிவுத்திறன் படைத்தவர்கள் மெய்யியல் அறிஞர்கள் சமய வல்லுநர்கள், கலைஞர்கள், ஊடகம் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் உலகில் உள்ள அனைத்துக் கலாச்சாரத்தைச் சார்ந்த பெண்களையும் அமைதி, நீதி, நற்போக்கு, அழகு, மானுடத்தோழமை மற்றும் உடனிருத்தல் இவற்றின் மதிப்பீடுகளையும் மறுகண்டுபிடிப்பு செய்யவும், இந்த மதிப்பீடுகளின் முக்கியத்துவத்தை உறுதிசெய்து, மீட்பை அனைவருக்கும் மற்றும் எல்லாத் தளத்திற்கும் அறிவித்துப் பரவலாக்கம் செய்பவர்களாகவும் இந்த முயற்சியை ஆதரிப்பவர்களாகவும் இருந்திட அழைக்கின்றோம்.

**எப்படி குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படைக் கருவாக உள்ளது என்பதும், குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதிலும், கல்வி போதித்தலிலும், அறநெறிப்பயிற்சியிலும், தற்காப்பிலும் மனிதத்தின் அவசியத்தையும் அறிந்திருப்போம்.** நம்முடைய சமகாலத்தின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதை குடும்பம் என்னும் நிறுவனத்தைத் தாக்குதலும், அதனை அவமதிப்பதும் மற்றும் அதன் முக்கிய பங்களிப்பைச் சந்தேகம் கொள்வதுமே ஆகும்.

மாதவிழிப்புணர்வை எழுச்சியுறச் செய்தலின் முக்கியத்துவத்தையும், இத்தேவையினைப் புதிய தலைமுறையினரின் உள்ளங்களில் திடமான கல்வி மூலம் புதுப்பித்தலையும், அறநெறி கருத்துகளையும் தெளிவான மதப்போதனைகளையும் திடமாகப் பின்பற்றுவதின் அவசியத்தையும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 06/2023